**இனிமையான குழந்தைகளே! நிச்சய புத்திக்கு வெற்றி என்ற நம்பிக்கையின் ஆதாரத்தில் தான் சொர்க்கத்தின் இராஜ்யத்திற்கு தகுதியானவர்களாக ஆக முடியும். பகவான் ஆசிரியராக இருந்து பாடம் கற்றுத் தருகின்றார் என்று முதலில் நம்பிக்கை வேண்டும்.**

கேள்வி: பாபா சர்வ சக்திவானாக இருந்தாலும், அனைத்து காரியங்களையும் ஏன் தூண்டுதல் மூலமாக செய்வதில்லை?

பதில்: பாபா கூறுகின்றார், நான் ஞானக்கடலாக இருக்கின்றேன். நான் ஞானம் கூறுவதற் காகவே வர வேண்டியதாக உள்ளது. கல்லூரியில் விரிவுரையாளர் வீட்டிலேயே இருந்தால் எப்படி பாடம் கற்றுத் தரமுடியும்? நான் குழந்தைகளுக்கு பாடத்தினை கற்றுக் கொடுத்து தகுதி யானவராக ஆக்க வேண்டும். சொர்க்கத்தின் ஆஸ்தியினை கொடுக்க வேண்டும். ஆதலால் உடலை ஆதாரமாக எடுத்து வருகின்றேன். இதில் குழந்தைகளுக்கு சிறிதும் சந்தேகம் வரவே கூடாது.

பாடல்: யார் நாயகனுடன் இருக்கின்றார்கள்.......ஓம்சாந்தி

பாபாவை நாயகன் (பிரிய தரிசன்) என்று கூறப்படுகின்றது. பாபா தண்ணீர் மழையைப் பொழிவதில்லை. இவைகள் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள். ஏதாவது விஷயத்தை யாராவது புரிந்து கொள்ளவில்லை என்றால் நீங்கள் கல்புத்தி என்று கூறுகின்றோம். பாரஸ் புத்தி என்று புகழ் பாடப்பட்டுள்ளது. பாரஸ்நாத் நம்மை பாரஸாக (தங்கமாக) ஆக்குகின்றார். யார் கல்லாக ஆக்குகின்றார்? கல்லாக ஆக்கக் கூடியவரை இராவணன் என்று கூறப்படுகின்றது. நீங்கள் இராமர் சம்பிரதாயம். நீங்கள் வரிசைக்கிரமமாக கல்புத்தியிலிருந்து தங்க புத்தியாக ஆகின்றீர்கள். எவ்வாறு இராஜா, இராணியோ அவ்வாறே பிரஜைகளும் தங்கப் புத்தி யாக எப்படி ஆகின்றார்கள்? அவசியம் யாராவது தங்க புத்தியாக ஆக்கியிருப்பார்கள். அவற்றில் சிலர் சூரிய வம்சத்தினர், சிலர் சந்திர வம்சத்தினர், சிலர் தாச தாசிகள், சிலர் பிரஜைகளிலும் செல்வந்தராக ஆவார்கள். அனைத்திற்கும் ஆதாரம் முயற்சி. அவசியம் பரமபிதா பரமாத்மாவை தான் பாரஸ்நாத் என்று கூறுகின்றார்கள். எந்த மனிதர் களையும் ஞானக்கடல் என்று கூறமுடியாது. நிராகார் பாபாவின் பெருமை, ஞானக் கடலானவருக்கு :ஞானத்தினை சொல்லிக் கொடுக்க அவசியம் உடல் தேவையாக உள்ளது. அவர் தான் நிராகார் பரமபிதா பரமாத்மா, அவருக்கு மிகவும் மகிமை உள்ளது. அனைவருக்கும் தந்தை நிராகாரமானவர். அவர் கூட ஒரு ஆத்மா. ஆத்மா தான் இது என்னுடைய குழந்தை என்று உடல் மூலமாகக் கூறுகின்றது.

பாபா புரிய வைக்கின்றார், பிராமணர்களுக்கு உணவு படைக்கின்றார்கள். அந்த பிராமண உடம்பில் இறந்து போன ஆத்மாவை அழைப்பார்கள். பிறகு அவர்களிடம் கேட்பார்கள். நல்லது, கேட்காவிட்டாலும் பிராமணர்களுக்கு உணவு கொடுப்பார்கள் அல்லவா! யாருடைய கணவராவது இறந்து விட்டால் நான் கணவருக்காக சிரார்த்தம் கொடுக்கிறேன் என்று கூறுவார்கள். திதி கொண்டாடுவார்கள். உங்களின் கணவர் இறந்து விட்டால் யாரை அழைக் கின்றீர்கள், ஆத்மாவையா? உடலையா? புரிந்து கொள்ள வேண்டிய

விஷயமல்லவா? அவசியம் ஆத்மாவைத் தான் கூப்பிடுவார்கள். உடல் என்பது அழிந்து போய்விடுகின்றது. பிராமணர் களுக்கு உணவு கொடுப்பார்கள். அந்த ஆத்மா பிராமணரின் உடலில் பிரவேசமாகி சாப்பிடு கின்றது. இறந்து போய்விட்ட ஆத்மா தான் வருகின்றது என்று எப்படி நம்புவது? அவசியம் வருகின்றது. ஆத்மா வந்து பேசுகின்றது. இந்தப் பொருளை எங்கே வைத்துள்ளாய் என்று கேட்கும் பொழுது அந்த ஆத்மா கூறுகின்றது. ஆதலால் கணவனின் ஆத்மாவிற்கு உணவைக் கொடுக்கின்றேன், கணவனின் ஆத்மாவிற்கு தலை வணங்குகின்றேன். பிராமணர்களைப் பார்ப்பதில்லை, எவ்வாறு கணவரின் பெயர், ரூபத்தினைப் பார்த்து தலை வணங்குகின்றார்கள். அந்த உடலை எரித்து விட்டார்கள். அந்த உடல் தான் நினைவு வருகின்றது. பிராமணர்களின் உடலில் ஆத்மா வருகின்றது. பிற ஆத்மா வந்துள்ளது என்ற உணர்வு ஏற்படுகின்றது. இப்போது ஆத்மா வந்துள்ளது என்று நம்பிக்கை வைக்க வேண்டியுள்ளது அல்லவா? குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார், பரமபிதா பரமாத்மா நிராகாரமாக உள்ளார். அவருக்கு தனக்கென்று உடல் இல்லை. எவ்வாறு ஆஸ்தியை கொடுப்பார்? அவசியம் ஆதாரம் எடுக்க வேண்டியதாக உள்ளது. இவர் மூலமாக பரமபிதா பரமாத்மா ஆஸ்தியைக் கொடுக்க வந்துள்ளார் என்று முதலில் நம்பிக்கை வேண்டும். தூண்டுதல் மூலமாகத் தரமாட்டார். ஞானக்கடலாக உள்ளதால், இவர் மூலமாக பாடத்தினைக் கற்றுத் தருகின்றார். இவைகள் புரிந்து கொள்ள வேண்டியவைகள். யாருக்கு எதிர்காலத்தில் உயர்ந்த அதிர்ஷ்டமில்லையோ, அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார் கள். இவருடைய ஆத்மா கூறுகின்றது, நான் ஞானக்கடல் அல்ல. நான் ஞானக்கடல் என்று பரமபிதா கூறுகின்றார். நான் நிராகாராமாக உள்ளேன். மேலே இருந்து எப்படி தூண்டுதல் மூலமாக பாடத்தைக் கற்றுத் தரமுடியும். இவ்வாறு பாடம் கற்றுத் தர முடியாது. கல்லூரி விரிவுரையாளர் வீட்டில் அமர்ந்து கொண்டே தூண்டுதல் மூலமாக பாடத்தினைக் கற்றுத் தர முடியுமா? அவசியம் பள்ளிக்கு வரவேண்டும் அல்லவா?. பரமபிதா பரமாத்மா கூட வீட்டில் அமர்ந்து கொண்டு பாடம் கற்றுத் தரமாட்டார். தூண்டுதலின் மூலமாக சித்திரங்களைப் புரிய வைக்க முடியுமா? இந்தச் சித்திரங்கள் கூட சிவபாபா செய்வித்தார். நான் தான் சித்திரங்களை செய்ய வைத்தேன் என்று கூறுகின்றார். இந்த பிரம்மாவிற்குத் தெரியாது. நான் குழந்தை களுக்கு தெய்வீகப் பார்வை கொடுத்து செய்வித்தேன். பாபா தான் செய்பவர், செய்விப்பவர்- நான் ஆத்மாக்களின் தந்தை என்று முதலில் பாபா புரிய வைக்கிறார். இல்லையென்றால் எவ்வாறு குழந்தைகளுக்கு ஆஸ்தி கிடைக்கும்? ஆலயங்கள் சரியாக உள்ளது. இவருடைய ஆத்மாவிற்கு கோவில் இருக்கின்றது. மற்ற அனைத்தும் ஜீவ ஆத்மாக்களின் ஆலயங்கள். ஏனென்றால் ஜீவாத்மா பிறப்பு, இறப்பில் வருகின்றது. பரமாத்மா வருவதில்லை. அவரின் ரூபம் நிராகார். நான் உங்களுக்கு இராஜயோகம் கற்றுத் தருகின்றேன் என்று பாபா கூறுகின்றார். நானும் கற்றுக் கெசாண்டு இருக்கின்றேன் என்று பிரம்மா பாபாவும் கூறுகின்றார். இவற்றில் தூண்டுதல் அல்லது சக்திக்கான பேச்சேயில்லை. யாராவது ஏதோ சக்தி வருகின்றது என்று கூறினால் ஆஸ்தி எப்படிக் கிடைக்கும்? அவசியம் உடலில் வந்தால் தான் பகவானுடைய மகாவாக்கியம் என்று கூறு முடியும். இவருள் ஏதோ சக்தி வருகின்றது என்பதல்ல. இங்கு படிக்க வேண்டும். நான் உங்களுடைய தந்தை. ஆசிரியராகவும் ஆக வேண்டியுள்ளது. எவ்வாறு அனைவருக்கும் தூண்டுதலை கொடுப்பேன்? ஒரே மாதிரியாக அனைவருக்கும் பாடத்தினை சொல்லித்

தரவேண்டும். இங்கு இராஜ்யம் ஸ்தாபனை ஆகிகொண்டிருக்கின்றது. சிலர் பிரஜையாக ஆகின்றார்கள். ஏதாவது கேட்க வேண்டும் என்றால் பாபாவிடம் கேட்கலாம். நாங்கள் எதுவரை தகுதியுடையவராக ஆகியுள்ளோம். சூரிய வம்சியா? சந்திர வம்சியமா அல்லது தாச, தாசிகளா? இச்சமயம் உடலை விட்டால் என்ன பதவி கிடைக்கும்? பாபாவிடம் வந்து படித்தால், பாபா படிப்பின் ஆதாரத்தில் கூறுவார். பள்ளியில் குழந்தைகள் எத்தனை மதிப்பெண் வாங்குவோம் என்று கேட்டால் ஆசிரியரும் மேலோட்டமாக எத்தனை மதிப்பெண் என்று கூறுவார். நீங்கள் முழுமையாகப் படிப்பதில்லை, ஆதலால் எப்படி மதிப்பெண் கிடைக்கும்? நாம் சரியாக படிப்பதில்லை என்று தனக்கேத் தெரியும். ஒவ்வொருவரின் இதயம் கூறுகின்றது. எல்லையற்ற தந்தை கூறமுடியும். சிலருக்கு பாபா கூறுகின்றார். நீ நல்ல மலராய் இருக்கின்றாய், இந்த எண்ணில் வெற்றி மாலையில் வர முடியும். இச்சமயத்தின் முயற்சிகேற்ப. ஆனால் போகப்போக கீழே விழுந்து விடுகின்றார்கள் அல்லவா? அநேக குழந்தைகளை பாபா பார்க்கின்றார். அவர்கள் இன்றில்லை. ஏனென்றால் ஸ்ரீமத்படி நடப்பதில்லை. மேலும் காமத்திற்கு, தேக அபிமானத்திற்கு வசமாகி விடுகின்றார்கள். சிலர் பேராசை, மோகத்திற்கு வசமாகி விடுகின்றார்கள். அப்படி உள்ளது. மாயை திருடக் கூட வைக்கின்றது. இவை யாவுமே மாயை செய்ய வைக்கின்றது. ஒரு பைசா திருடினாலும், இலட்சம் திருடினாலும் திருட்டு என்று சொல்லப்படுகின்றது.

ஒரு சிலரிடம் கெட்ட பழக்கங்கள் இருக்கின்றது. சிலரிடம் காமத்தின் பழக்கம் உள்ளதால் ஓடிப் போய் விடுகின்றார்கள். அம்மாதிரியானவர்கள் ஞானத்தில் நிலைத்திருக்க முடியாது. பேராசைக்கு வசமாகி திருடி விடுகின்றார்கள். மாயை திருட வைக்கின்றது. மாயை பிரேவசம் ஆகிவிடுகின்றது. முதலாவதாக தேகம் என்ற எண்ணத்தினை விடுவதில்லை. தன்னை ஆத்மா என்று உறுதி படுத்தவும் என்று பாபா கூறுகின்றார். ஆத்மா அழியாதது, உடல் அழியக்கூடியது. நீங்கள் ஆத்மா என்ற எண்ணம் உடைவராக ஆகுங்கள். ஒரு சிலர் இரண்டு மூன்று மாதங்களில் ஆத்மா எண்ணம் உடையவராக ஆகிவிடுகின்றார்கள். சிலர் 25 ஆண்டுகள் ஆனாலும் ஆத்மா எண்ணத்தில் இருப்பதில்லை. இந்த ஒரே பாடம் மிகவும் உயர்ந்தது. 50-60 வருடங்கள் வரை நடை பெற்றுக் கொண்டேயிருக்கின்றது. படிப்பின் பாடங்களையும், ஆசிரியரையும் புரிந்து கொள்ளவில்லை என்றால் என்ன பாடம் படிப்பார்கள். இந்த பாபாவைப் புரிந்து கொள்வதால் சிவபாபாவையும் புரிந்து கொள்வார்கள். அவரிடம் தான் புத்தியின் தொடர்பு வைக்க வேண்டும். நாம் உலகத்திற்கே எஜமானராக ஆக வேண்டும். இந்த மனிதர்களால் ஆக்க முடியாது. எதுவரை நம்பிக்கை இல்லையோ, அதுவரை எதுவுமே புரிந்து கொள்ளவில்லை. 20, 25 ஆண்டுகளாக உள்ளவர்களுக்கும் முழுமையான நம்பிக்கை இருப்பதே யில்லை, தடுமாறிக் கொண்டேயிருப்பார்கள். அவ்வப்போது நம்பிக்கை, திடீரென்று சந்தேகம். பாபா புரிய வைக்கின்றார், நீங்கள் இறை தந்தை என்று கூறுகின்றீர்கள். அப்படியென்றால், ஆத்மாக்களாகிய நீங்கள் இறை தந்தையின் குழந்தைகள். அவர் உங்களுடைய தந்தை. அனைவருமே எழுதுங்கள், ஆம் நம் அனைவருக்கும் அவர் ஒருவரே தந்தை. தந்தையிட மிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. சொர்க்கத்தின் இராஜ்யம் கிடைக்கின்றது என்றால் அவசியம் இராஜயோகம் கற்றுக் கொடுத்திருப்பார். எதுவரை பாபாவிடம் முழுமையான நம்பிக்கை யில்லையோ, அவர்கள் சொர்க்கத்திற்குத் தகுதியானவர்கள் அல்ல.

பாபாவையே அறிய வில்லை என்றால் எப்படி சொர்க்கத்தின் ஆஸ்தி யினைப் பெற முடியும்? ஆஸ்தியைக் கொடுப் பதற்காகத் தான் பாபா வந்திருக்கின்றார். பாக்கியத்தில் இல்லை யென்றால் வாங்குவதில்லை. நிச்சயபுத்தி உள்ளவர்கள் வெற்றி அடைவார்கள். சந்தேக புத்தி உள்ளவர்கள் தோல்வி அடைவார்கள். முதன் முத-ல் பாபாவை அறிந்து கொள்ள வேண்டும். பரம்பிதா பரமாத்மா நிராகாரமாக உள்ளார். அவர் வந்து பாடத்தினைக் கற்றுத் தருகின்றார். இதில் தூண்டுதலுக்கான பேச்சே இல்லை. வீட்டில் இருந்து கொண்டே ஆசிரியர் பாடங்களை கற்றுக் கொடுப்பாரா? இது நிச்சயமாக முடியாதது. நான் வருகின்றேன், எனது கோவில்களும் இருக்கின்றன என்று பாபா கூறுகின்றார். நிராகாரமானவர் ஒன்றுமே செய்ய முடியாது. ஆதலால் உடலை கடனாக எடுக்க வேண்டியுள்ளது. இல்லையென்றால் என்னிடமுள்ள காலச் சக்கரத்தை பற்றிய ஞானத்தை எப்படிக் கற்றுத் தருவேன்? அவசியம் உடலில் வருகின்றேன். குழந்தைகள் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றார்கள். ஒருவர், மற்றவர்களை அழைத்து வருகின்றார்கள். யார் தேவி, தேவதா தர்மத்தினரோ, அவர்களுக்கான நாற்று நடப்படுகின்றது. அவர்கள் வந்து பிராமணர் களாக ஆகின்றார்கள். அவர்களின் நாற்று நடப்படுகின்றது. பிராமணர்களின் தந்தை பிரம்மா. பிரம்மாவின் தந்தை சிவபாபா. ஆன்மீகத் தந்தை, ஸ்தூல தந்தை இருவரும் உள்ளனர். நீங்கள் சிவபாபாவின் ஆன்மீகக் குழந்தைகள், பிரம்மாவின் ஆத்மா கூட சிவபாபாவின் குழந்தை. பின்னர் ஸ்தூலத்தில் பிராமணர்களுக்கு தந்தை. இதன் மூலமாக பிரம்மா குமார், குமாரிகள் ஆகின்றார்கள். நீங்கள் பிரம்மாவின் குழந்தை, சிவபாபாவின் பேரன், பேத்திகள். அவரிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. இவைகள் புரிந்து கொள்ள வேண்டிய விசயங்கள். நாங்கள் எந்த பதவியை பெறுவோம் என்று பாபாவிடம் குழந்தைகள் கேட்டால் பாபா கூறிவிடுவார்.

சிலர் புதிய புதிய குழந்தைகளை அழைத்து வருகின்றார்கள் - சொல்லவே வேண்டாம்! ஒரு முறை சந்தித்தவுடன் அம்பு போல் பதிந்து விடுகின்றது. நல்ல, நல்ல கடிதங்கள் எழுதுகின்றார்கள் - இன்னார் மிகவும் நல்ல விசயங்களைக் கூறினார்கள். பாபா முழுமையான நிச்சயபுத்தி உள்ளவர்களாக ஆகி விட்டோம். இப்போது நீங்கள் வந்து விட்டீர்கள். உங்களிடமி ருந்து முழுமையான ஆஸ்தி அடைந்தே தீருவோம். பாபாவை சந்திக்க வில்லை, ஆயினும் அவ்வாறு கடிதம் எழுதுகின்றார்கள். அதனால் அவர் மிகவும் செல்லமான குழந்தை என்று புரிந்து கொள்கின்றோம். நல்ல நாற்று. உடனே புரிந்து கொள்கின்றார்கள். ஸ்ரீநகரில் கிளை நிலையம் திறக்கப்பட்டுள்ளது. அங்குள்ள புதிய புதிய குழந்தைகள் கடிதம் எழுதி உள்ளார்கள். இப்போது சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளது. இந்த பந்தனம் மட்டும் உள்ளது. காரணங்களையும் எழுதி விடுகின்றார்கள். யார் தேவதை தர்மத்தினைச் சேர்ந்தவர்களோ, அவர்கள் தான் வருவார்கள். யார் கிருஷ்ணபுரியில் வருவார்களோ, அவர்கள் பிரம்மா புரியில் வருவார்கள். பிரம்மபுரி என்பதில்லை. சிலர் பிரம்ம குமாரி என்று எழுதுகின்றார்கள். இது தவறு. பிரம்மம் என்பது தத்துவம். அது எப்படி குமாரி ஆக முடியும்? பிரஜாபிதா பிரம்மா என்று புகழ் பாடப்பட்டுள்ளது. இங்கு தான் பிரஜாபிதா இருப்பார் அல்லவா! பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தை பிரம்மா குமார், குமாரிகள், அதாவது பரமபிதா பரமாத்மா சிவனின் சக்திகள். சிவபாபாவிடமிருந்து சக்திகள் கிடைக்கின்றது, பிரம்மாவின் ஆத்மாவிடமிருந்து அல்ல. சிவபாபாவைத் தான் நினைவு செய்ய வேண்டும். இதன் மூலம் பதீத்தத்தலிருந்து பாவனமாக

ஆகின்றீர்கள். இச்சமயம் அனைவருமே பாவ ஆத்மாக்கள். அனைவருமே விகாரத்தில் ஜென்மம் எடுக்கின்றார்கள். இவ்விஷயங்களை சிலர் உடனே புரிந்து கொள்வார்கள். சிலர் சிறிது கூட புரிந்து கொள்வதில்லை. இந்த ஞானம் மிகவும் அதிசயமானது. பகவான் பக்தியின் பலனைக் கொடுப்பதற்காக வரவேண்டியுள்ளது. குழந்தைகளுக்கு பாடம் கற்றுத் தருகின்றார். உங்களுடைய தந்தையாகவும், ஆசிரியராகவும், சத்குருவாகவும் இருக்கின்றேன் என்று கூறு கின்றார். அனைவரையும் வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கின்றேன் என்று கூறுகின்றார். ஆதலால் விடுதலை செய்பவர் என்றும் கூறுகின்றார்கள். தூண்டுதல் மூலமாக விடுதலை செய்ய முடியுமா? பள்ளியில் கூட வளர்ச்சி ஏற்படுகின்றது. ஆனால் பழைய உலகத்தினை நினைவு செய்தால் பாபாவை மறந்து விடுவார்கள். சிறிது சிறிதாக மறந்து மீண்டும் பழைய உலகத்திற்கே சென்று விடுகின்றார்கள். பின்னர் சிறிது கூட ஞானம் என்பதே இருக்காது. வியாபாரம் ரத்து ஆகிவிடுகின்றது. பாபாவிற்குக் கொடுத்ததை திரும்பிப் பெற்றுக் கொள்கின்றார்கள். புத்தி என்ற பூட்டு முழுமையாகப் பூட்டி விடுகின்றது. பாபா புத்திவானுக்கு எல்லாம் புத்திவான். எவ்வளவு நன்றாகப் புரிய வைக்கின்றார். கேட்பவர்களின் முகம், கண்கள், மூலமாகவே புரிகின்றது. இவர்கள் எதுவரை தாரணை செய்துள்ளார்கள். உயர்ந்த பதவியைப் பெற முடியுமா? இல்லையா? பாபா உடனே புரிந்து கொள்கின்றார், இவர் புரிந்து கொள்ளக் கூடியவரா? இல்லையா? அல்லது இவரின் புத்தி யோகம் எங்கே அலைந்து கொண்டிருக்கிறது? நாடிப் பார்க்கப்படுகிறது. நாடி பார்க்கக் கூடியவர்கள் கூட புத்திசாலியாக இருக்க வேண்டும். உயர்வான குறிக்கோளாக உள்ளது. இவர் புரிந்து கொண்டு ஏற்று கொள்வாரா? இல்லையா என்று நீங்கள் அறிந்து கொள்ள முடியும். வரிசைப்படியாக உள்ளார்கள்.

இவர் (பிரம்மா) பிரம்மா புத்திரா (பெரிய நதி) ஆவார். ஆனால் தன்னைத்தானே மகிமை செய்ய மாட்டார். சரஸ்வதி கூட புத்திசாலி. அந்தப் படிப்பில் தேர்வு என்பது இங்கேயே வைப்பார்கள். இந்தப் படிப்பிற்கான பரீட்சை தற்போதில்லை. எதுவரை உயிர் வாழ்கின்றோமோ அதுவரை ஞானம் என்ற அமிர்தத்தினைப் பருகுவோம். நல்லது.

இனிமையிலும், இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணக்கான முக்கிய சாரம்:

(1) ஒருபோதும் எந்தவிதமான பழைய பழக்கத்திற்கும் வசமாகி தவறான கர்மங்களைச் செய்யக் கூடாது. தேக அபிமானம் என்ற பழக்கத்தினை விட்டுவிட்டு, ஆத்மா என்ற எண்ணத்தில் இருக்கும் முழுமையான பாடத்தினைப் படிக்க வேண்டும்.

(2) ஒருபோதும் நம்பிக்கையில் அசையக் கூடாது. எதுவரை உயிருடன் இருக்கின்றோமோ அதுவரை படிப்பைப் படிக்க வேண்டும், படிப்பிக்க வேண்டும்.

வரதானம் : செய்விப்பவரின் நினைவு மூலம் சதா கவலையற்ற மகாராஜாவாக ஆகக்கூடிய நம்பிக்கை புத்தியுடைய கவலையற்றவர் ஆகுக.

பிராமண வாழ்க்கை என்றாலே கவலையற்ற மகாராஜாவாக இருப்பது. எப்படி பிரம்மா பாபா கவலையற்ற மகாராஜாவாக இருந்ததினால் தான் எதை அடைய வேண்டுமோ, அதை அடைந்து விட்டேன் வேறு என்ன வேலை இருக்கிறது என்ற பாடல் பாடப்பட்டிருக்கிறது. சேவையின் செயலும் என்னவெல்லாம் மீதமிருக்கிறதோ, அதையும் கூட செய்விப்பவர் செய்து விடுகிறார். மேலும் செய்ய வைத்துக் கொண்டும் இருக்கிறார். பாபா செய்விப்பவராக இருந்துக் கொண்டு நம் மூலம் செய்துக் கொண்டிருக்கிறார் என்ற நினைவு சதா இருந்தால் கவலையற்ற இராஜா ஆகிவிடலாம். இந்த செயல் நடந்தே தீரும், நடந்திருக்கிறது என்ற நம்பிக்கை இருக்க வேண்டும், ஆகையால் நம்பிக்கை புத்தி, கவலையற்றவர், பேரரசராக இருங்கள்.

சுலோகன்: தனது அனைத்து பலவீனங்களையும் நீக்கிவிட வேண்டுமென்றால் எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வை தாரணை செய்யுங்கள்.